www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V12Bot

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

01209

வகுப்பு 12

காலஅளவு: 3.00 மணிநேரம் **தாவரவியல்** மதிப்பெண்கள்: 70

பகுதி - I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்** 15×1=15

1) ஓசோனின் தடிமனை அளவிடும் அலகு?
அ) ஜூல் ஆ) கிலோ இ) டாப்சன் ஈ) வாட்

2) விதையிலாப் பயிர்களை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் ஒரே வழிமுறை .......... ஆகும்
அ) மரபணு சடுதிமாற்றம் ஆ) கலப்புறுத்தம்
இ) பன்மடிய பயிர்பெருக்கம் ஈ) பயிர்பெருக்கம்

3) **கூற்று** : மஞ்சள் பல்வேறு புற்றுநோய்களை எதிர்க்கிறது
**காரணம்** : மஞ்சளில் குர்குமின் என்ற ஆண்டிஆக்ஸிடெண்ட் உள்ளது
அ) கூற்று சரி, காரணம் தவறு
ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்று, காரணம் இரண்டும் சரி
ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

4) கீழ்க்கண்டவற்றில் எது சிதைவு செயல்முறைகள் அல்ல
அ) வடிதல் ஆ) சிதைமாற்றம் இ) வளர்மாற்றம் ஈ) துணுக்காதல்

5) கீழ்க்கண்ட எந்த மண்ணின் நீர் தாவரங்களுக்குப் பயன்படுகிறது?
அ) புவிஈர்ப்பு நீர் ஆ) வேதியியல் பிணைப்பு நீர்
இ) நுண்புழை நீர் ஈ) ஈரப்பத நீர்

6) தொடர்விளிம்பற்ற கருவூண் திசு காணப்படுவது
அ) கோக்கஸ் ஆ) அரிக்கா இ) வாலிஸ்நேரியா ஈ) அராக்கிஸ்

7) பாரம்பரிய பட்டாணித்தாவரச் சோதனையில் மெண்டல் எதைப் பயன்படுத்தவில்லை?
அ) மலரின் அமைவிடம் ஆ) விதையின் நிறம்
இ) கனியின் நீளம் ஈ) விதையின் வடிவம்

8) கீழ்காண்பவைகளில் எது மரபிய செய்தியின் சரியான வரிசையைக் குறிக்கிறது?
அ) DNA→RNA→புரதம் ஆ) RNA→DNA→புரதம்
இ) RNA→புரதம்→DNA ஈ) புரதம்→RNA→DNA

9) தாவரத்திசு வளர்ப்பில் திடப்படுத்தும் காரணியாக பயன்படுத்தப்படுவது
அ) நிக்கோட்டினிக் அமிலம் ஆ) கோபால்ட்டஸ் குளோரைடு
இ) EDTA ஈ) அகார்

10) எத்திடியம் புரோமைடு எந்த தொழில்நுட்ப முறையில் பயன்படுத்தப்படுகிறது?
அ) சதர்ன் ஒற்றியெடுப்பு தொழில்நுட்ப முறை
ஆ) வெஸ்ட்ர்ன் ஒற்றியெடுப்பு தொழில்நுட்ப முறை
இ) பாலிமரேஸ் சங்கிலி தொடர்வினை
ஈ) அகரோஸ் இழும மின்னாற் பிரிப்பு

11) தவறான இணையைக் கண்டறிக
அ) பர்மா தேக்கு - டெக்டோனோ கிராண்டிஸ்
ஆ) தோதகத்தி - டால்பெர்ஜியா சிற்றினம்
இ) கருங்காலி - டயாஸ்பைரஸ் எபெனம்
ஈ) மருதாணி - ஷொரியா ரொபஸ்டா

12) சுற்றுச்சூழலில் $SO_2$ மாசுபாட்டினை குறிப்பிடுகின்ற மிகப்பொருத்தமான சுட்டிக்காட்டிகள் எது?
அ) பாசி ஆ) பூஞ்சை
இ) லைக்கன்கள் ஈ) ஊசியிலைக்காடுகள்

13) ஒடுங்கு மறைத்தலின் புறத்தோற்ற விகிதம்
அ) 9 : 3 : 4 ஆ) 12 : 3 : 1 இ) 13 : 3 ஈ) 9 : 7

14) கன்றுக்குட்டியின் சிறுகுடல் பகுதியிலிருந்து பிரித்தெடுக்கப்படும் நொதி
அ) ரெஸ்ட்ரிக்ஷன் நொதி ஆ) DNA லைகேஸ்
இ) ஹெலிகேஸ் ஈ) ஆல்கலைன் பாஸ்ஃபடேஸ்

15) பத்து விழுக்காடு விதி ............ என்பவரால் முன்மொழியப்பட்டது.
அ) லின்டிமேன் ஆ) G.H. ஷல் இ) மிஸ்ரா ஈ) யூஜின் P.ஓடம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பகுதி - II

**II. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 6×2=12**
**வினா எண்: 24க்கு கட்டாயமாக விடையளிக்கவும்**

16) கான்தரோ ஃபில்லி என்றால் என்ன?
17) குறுக்கேற்றம் - வரையறு
18) இயற்கை வேளாண்மையின் வரையறையைத் தருக.
19) வேளாண்வேதிப் பொருள்கள் என்றால் என்ன?
20) கலப்பின வீரியம் - சிறுகுறிப்பு எழுதுக
21) விதைப்பந்து என்றால் என்ன?
22) சைபிரிட் - வரையறு
23) ஆற்றல் பிரமிட் எப்போதும் நேரானவை, காரணம் கூறு
24) PCR-சிறு குறிப்பு வரைக.

பகுதி - III

**III. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 6×3=18**
**வினா எண்: 33க்கு கட்டாயமாக விடையளிக்கவும்**

25) தொடர்ச்சியற்ற வேறுபாடுகளைத் தொடர்ச்சியான வேறுபாடுகளுடன் வேறுபடுத்துக
26) தனிசெல் புரதஉற்பத்திக்கு பயன்படும் பாசிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
27) பல்கருநிலை என்றால் என்ன? வணிகரிதியில் இது எவ்வாறு பயன்படுகிறது?
28) இயைத்தலுறுப்பு என்றால் என்ன?
29) உறைகுளிர் பாதுகாப்பு பற்றி குறிப்பு வரைக.
30) மணற்பங்கான மண் சாகுபடிக்கு உகந்ததல்ல ஏன் என விளக்குக.
31) புவியியல்சார் தகவல் அமைப்புகளின் முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக.
32) டபீட்டத்தின் பணிகளை எழுதுக
33) 'கசப்புகளின் அரசன்' என அழைக்கப்படுவது? எது? அதன் மருத்துவ முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

பகுதி - IV

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5×5=25**

34) அ) காற்று மகரந்தச்சேர்க்கை அடையும் மலர்களின் பண்புகளை எழுதுக.
(அல்லது)
ஆ) ஒங்கு மறைத்தலை எடுத்துக்காட்டுடன் விவரி?

35) அ) கலப்புறுத்தலின் படிநிலைகளை விவரி?
(அல்லது)
ஆ) புலனுணர்வுமாற்ற மருந்துகள் என்றால் என்ன? அபின் மற்றும் கஞ்சாச்செடி பற்றிய குறிப்பு வரைக.

36) அ) வறண்டநிலத் தாவரங்களின் உள்ளமைப்பியல் தகவமைப்புகளை எழுதுக.
(அல்லது)
ஆ) வேளாண்காடுகளின் நன்மைகளை எழுதுக

37) அ) தாவரத்திசு வளர்ப்பின் பயன்பாடுகளைக் குறிப்பிடுக.
(அல்லது)
ஆ) தாங்கிக்கடத்திகள் இல்லாமல் ஓம்புயிரித் தாவரத்திற்கு பொருத்தமான விரும்பத்தகுந்த மரபணுவை மாற்ற முடியுமா? உன்விடை எதுவாகினும் அதை நியாயப்படுத்துக.

38) அ) பொதுவாக மனிதனின் செயல்பாடுகள் சூழல் மண்டலத்திற்கு எதிராகவே உள்ளது. ஒரு மாணவனாக நீ சூழல் மண்டல பாதுகாப்பிற்கு எவ்வாறு உதவுவாய்?
(அல்லது)
ஆ) மூலக்கூறு மரபியலாய்வின் அரபிடாப்சிஸ் ஒரு தகுந்த மாதிரி தாவரம் என்பதற்கான பண்புகள் யாவை?

- - - - - -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com